# வட-கிழக்கு போரில் அரசு வெற்றி பெறும் சந்திரிகா

(கொழும்பு)
இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தம் வெற்றியடையுமென எவரும் எதிர்பார்க்க வேண்டாம் என மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தத்தினால் பயன்பெறுபவர்கள் அதனை முடிவுக்குக் கொண்டுவர ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

1978ம் ஆண்டு தமிழர் விடுத்த கோரிக்கைகளை பதவியிலிருக்கும் இன்றைய அரசு (4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 20 இதழ் 261
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 05 — 11 — 1993

## இனப்பிரச்னை தீர்வுக்கு அதிகாரப்பரவலாக்கல் தேவை

(கொழும்பு)
அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலமாகவே இந்த நாட்டின் இனப்பிரச்னையைத் தீர்க்கமுடியும்

மேல் மாகாணசபை முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்குள் ஓர் அரசாங்கம் இருக்கமுடியாதென ஜனாதிபதி கடந்தவார நாடுகளுக்குள் தெரிவித்த கருத்... 4-ம் பக்கம் பார்க்க

# கொழும்பு செல்லும் தமிழர்கள்

# ரயில் நிலையங்களில் கைது

(கொழும்பு)
வடபகுதியிலிருந்து கொழும்பு செல்லும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தென்பகுதியிலுள்ள ரயில் நிலையங்களில் வைத்து ஸ்ரீலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்படுவதாகவும் இவர்களைக் கைதுசெய்ய சிவில் உடை தரித்த தமிழ்பேசும் குழு ஒன்று உதவி புரிவதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவிலிருந்து ரயில் மூலம் கொழும்பு சென்ற பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் சுமார் விசாரைத்து ஸ்ரீலங்கா பொலி சாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருபதுக்கும் கூடுதலான தமிழ் இளைஞர்களும் 15 தமிழ் யுவதிகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

ரயிலுக்குள் ஏறிய ஸ்ரீலங்கா பொலிசாரும் மற்றும் சிவில் உடையில் வந்த தமிழ்பேசும் குழுவினரும் (4-ம் பக்கம் பார்க்க)

யாழ். சுகாதார நிலைமை

## யூனிசெவ்குழுவிடம் விளக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய நான்கு பேர் அடங்கிய யூனிசெவ் குழுவினரிடம் யாழ். மாவட்ட சுகாதார நிலைமைகள் குறித்து விரிவாக எடுத்துவிளக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையிலும், யாழ். பிராந்திய சுகாதார பணிமனையிலும் நடந்த கலந் (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் கடும் யுத்தத்திற்கு தயாராகி வருகின்றனர்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் கடுமையான யுத்தம் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக ஏஜெ ன்சி செய்திகள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கு பிரச்னை ஒரு இனப்பிரச்னையல்ல அது ஒரு பயங்கரவாதப் பிரச்னை என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தெரிவித்த பிறகு கடுமையான யுத்தம் ஒன்றை மேற்கொள்வ புலிகள் முடிவு செய்ததாக திரு அன்ரன் பாலசிங்கம் அண்மையில் தெரிவித்ததாகவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் இந்தப் பிரச்னையை போர்முனையில் தீர்த்துக்கொள்ள முடிவு செய்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது.

இந்த யுத்தத்தின்போது தான் நேரடியாகவே அதற் (3-ம் பக்கம் பார்க்க)

## குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளை இராணுவ காவலரணிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் பொதுமக்கள் தரப்பில் இழப்புகள் ஏற்பட்டிருக்கக்கூடுமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. (ஈ)

## கிளாலி—பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரி படகுச் சேவை நாளை 6ம் திகதி வழமையான நேரத்திற்கு நடைபெறுமென விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஈ)

வட்டுக்கோட்டை விவாதத்தில்

## அநுரா ஐ.தே.க. எம்.பி.யாக உரையாற்றுவார்

(கொழும்பு)
எதிர்வரும் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஓர் அங்கத்தவரான திரு. அநுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும் ஐ. தே. (4-ம் பக்கம் பார்க்க)

## அநுராவுக்கு வசதியாக ஐ. தே. க. எம். பி. ஒருவர் நேற்று ராஜினமா

(கொழும்பு)
ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டபிள்யூ ஜே. பெர்ணாண்டோ தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நேற்று ராஜினமா செய்தார்.

தமது ராஜினமாகடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்னவிடம் உத்தியோகபூர்வமாக நேற்றுக் கையளித்தார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடம் குறித்து தேர்தல் ஆணை (4-ம் பக்கம் பார்க்க)

## படையினர்க்கு பழுதடைந்த உணவுவகைகள் விநியோகம்!

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு போர்முனைகளிலுள்ள இராணுவத்தினருக்கு விநியோகிக்கப்படும் உணவு வகைகள் மனிதர் உட்கொள்வதற்கு தகுதியற்றவையெனக் கூறி அவற்றை தாம் நிராகரித்து விட்டதாக பிரிகேடியர் ஜானக பெரேரா வுக்கு படையினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

படையினர் தமக்குத் தெரிவித்துள்ள மேற்படி விடயத்தை அவர் இராணுவ உயர் பீடத்துக்கு சமர்ப்பித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## இட்ட அமுலாக்கல் அமைச்சர் பதவி

(கொழும்பு)
ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்துள்ள திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்கு திட்ட மிடல் அமுலாக்கல், வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன

எதிர்வரும் 15ம் திகதி திரு. பண்டாரநாயக்கா மேற்படி அமைச்சராகப் பதவியேற்க இருப்பதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (4-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி

## பாதிக்கப்பட்ட மாணவர் பெற்றோருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)
அண்மையில் வெளியான 1992/93 கல்வியாண்டிற்கான வெட்டுப்புள்ளிகளின் மாற்றம் ஏற்பட்டு மேலதிக அனுமதிகள் வழங்கப்படும் நிலையில் பின்வரும் பிரச்னைகள் உருவாகலாம்.

ஒரு மாணவன் இரு அனுமதிகளிலும் கருதப்படுவதால் வேறொரு மாணவன் அனும (4ம் பக்கம் பார்க்க)

குண்டுபட்டு குடல் சிதறி
உன் பிள்ளை வீதியில் கிடக்கிறாள்
குருதிச் சேற்றில் உன் நிலம் கிடக்கிறது
அடுப்பெரிக்க விறகுதேடும் தமிழனே
வாடா எதிரியை எரிப்போம்.

## வேலை விளம்பரம்

### விற்பனையாகின்றது

பாலகுஜின் விடுகதைகள், புதிர்கள் 150 (தொடியும் விடையும்) யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். விலை 30/-

(ஏ-3556)

### தீபாவளி வெளியீடுகள்

அக்டோபர் வியாழன், சனி, செவ்வாய் மாற்றப் பலன்களும் நவம்பர் சனி மாற்றப் பலன்களும், ரூ 10/-, பாடசாலை, அலுவலக உபகரணங்களும் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-567)

### விற்பனைக்கு

பழைய பத்திரிகை, சாக்கு, உரப்பை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் ஈழநாடு நிறுவனம், யாழ்ப்பாணம். (ஏ-3557)

### விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

1 அரசறிவியல் அறிமுகம் By கீத பொன்கலன், 2. 20ம் ஆண்டு சுற்றுடக்கல்வி இராசமலர் இராசதுரை (செயல் நூல்). 3. Omos English Grammar By Thillai Mohan, 4. உயர்தர கணக்கியல் செய்முறை பயிற்சி யோகேஸ்வரன், 5. புவியியல் தேசப்படத் தொகுதி By கந்தையா குணராசா. ஸ்ரீ லங்கா புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(எ-3551)

### அவசர சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவ மாணவர்களுக்கான அவசர சந்திப்பு ஒன்று இன்று காலை சித்த மருத்துவ மாணவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நூலகத்திற்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கிளை நூலகத்திற்கு வாசகர்களின் நலன் கருதி ஜெனரேற்றர் மூலம் மின்சார வசதியேற்படுத்த உத்தேசித்துள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இச்செய்தி நவம்பர் 3-ம் திகதி வெளியான "ஈழநாடு" பத்திரிகையில் யாழ் மாநகர எல்லைக்குள் விரைவில் மின் விநியோகம் என்று தவறாகப் பிரசுரமாகியுள்ளது.

வடபிராந்திய
வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்
விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

வருகின்ற தீபாவளிப் பண்டிகை தினத்தை
முன்னிட்டு
**06-11-93 சனிக்கிழமையும்,**
**07 11-93 ஞாயிற்றுக்கிழமையும்**
வர்த்தக நிலையங்களை முழுமையாகத் திறந்து
வியாபாரம் செய்யலாம் என
அறியத் தருகின்றோம்.
நன்றி.

செயலாளர்

(சி-574)

## அவசர பொதுக்கூட்டம்

சகல சித்தமருத்துவ மாணவர்களையும் 5 - 11 - 93 வெள்ளிக்கிழமை (இன்று) பி. ப. 2-00 மணிக்கு தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சித்தமருத்துவ மாணவர் மன்றம்

(ஏ-3563)

உ
முனீஸ்வரன் துணை

## 60 ம் ஆண்டு நினைவுநாள்



யாழ்.கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் தேவஸ்தான ஸ்தாபகர்

### அமரர் கணபதிப்பிள்ளை கந்தையாபிள்ளை

நிகழும் ஸ்ரீமுக ஸு ஐப்பசி மீ 20-ம் நாள் (5-11-93) வெள்ளிக்கிழமை அன்னாரின் 60 வது ஆண்டு நினைவு நாள் முனீஸ்வரன் ஆலயத்தில் அந்நாளை விசேடபூசை ஆராதனைகளுடன் நடைபெறும்.

முத்தியடைந்தார் முனீஸ்வரன் அருளால்

கடந்த பொருளெனக் கடவுளைக் கருதி
இடம்பர ந்திடு யாழ்ப்பா நகரினில்
ஒல்லாந்தர் கோட்டை ஈசான த்தில்
ஒண்பெரு வாகிய முனீஸ்வரன் கோயில்
உண்டு பண்ணினார் கணபதிப் பிள்ளை
ஒருரும் மைந்தன் கந்தையா பிள்ளை
மூல மூர்த்தியாய் முனீஸ்வரன் தன்னை
கோலமாய் நிறுவிச் சுடர்நிறை பூசை
அர்ச்சக ராகவும் ஆலய யம்பரி
பாலக ராகவும் ஸ்தாபக ராகவும்
இதமுறப் பணிக ளாற்றியே வாழ்ந்து
பக்திப் பயிர்வளம் பக்குவம் பார்த்தே
முத்தி யடைந்தார் முனீஸ்வரன் அருளால்

### திதி நிர்ணய வெண்பா


சேர்ஸ்ரீ முகவருஷம் செப்புதமிழ் ஐப்பசியில்
பார்தேர் அபரபக்கம் பஞ்சுஷஷ்டி பார்நீத்தே
சென்றார் கணபதிப் பிள்ளைசேயர் கந்தையா
நன்னாள் புனர்பூசம் நாள்
அறுபது ஆண்டுகள் ஓடி மறைந்தன
அருள் நிறை முனீஸ்வரன் ஆலய நிறைவும்
நெறிநிறை கந்தையா ஐயாவின் அன்புயர்
நேசமகளுர் நல்லுயர் இராச லிங்கம் பிள்ளை
அவர்தம் மருமகன் ஞான சேகரம்
பிள்ளையென்று பேரனும் வழி வழிப்
பேறுடை பேரர்களாகப் பெருமதி பெற்றார்
கும்பிட்டா ரென்றும் குறைவிலா வாழ்வர்
கோட்டை முனீஸ்வர நாட்டமே நாளும்
சத்தியம் காக்கும் சற்குண மூட்டும்
சாந்தி சாந்தி சாந்தியே நல்கும்.

K. J. இராசசிங்கம்
தேவஸ்தானபரிபாலகர்.

(இ-571)

## விவசாயிகளே!
## தொழிற்சாலை உரிமையாளர்களே!
## இயந்திரப் பாவனையாளர்களே!

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்
பெற்றோலிய எரிபொருள் பிரச்னைக்கான
குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.




"ஆக்கி வாயுப் பிறப்பாக்கி"

உங்கள்

★ நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
★ மின் பிறப்பாக்கியை இயக்க

மரக்கரி அல்லது சிரட்டைக் கரி மட்டுமே கொண்டு
சக்தியைத் தரவல்லது தான்

ஆக்கிவாயு பிறப்பாக்கி

(தமிழீழத்தில் தொழில்துறை மேம்பாட்டுநிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது)

இரகசியம் ஒன்றும் இல்லை !

ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தித் தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லது.

இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் இயந்திரங்களை இயக்க வல்ல ஆக்கி வாயுவை உற்பத்தி செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கி வாயுப் பிறப்பாக்கியை இணைத்து இயக்க முடியும்.

★ முதற் கட்டமாக வூல்சிலி (WOLSELEY) இயந்திரங்களுக்குப் பொருத்திக் கொள்ளலாம்.

பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

எல்லா நாட்களிலும் காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-30 வரை ஆக்கி வாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்,

எமது அலுவலகம்: சக்திப் பகுதி
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
தமிழீழ விடுதலைப் புலிகள்.
காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி.

(ஏ-8561)

மணிவாசகம்

உத்தமச் செயல்களை செய்ய நினைத்தால் அதை உடனடியாகச் செய்வதே சிறந்தது — ஸ்ரீ அரவிந்தர்.

# 16 வருடங்களின் பின் நாடு திரும்பியபோது பாக். பிரதமர் பெனுஷிரின் சகோதரர் பொலிசாரால் கைது

(கராச்சி)

பாகிஸ்தான் பிரதமர் பெனஷிர் பூட்டோவின் சகோதரர் முஸ்தபா பூட்டோ நேற்று முன்தினம் கராச்சி விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கைது செய்யப்பட்டார்.

அண்மையில் நடந்த சிந்து மாகாணசபை தேர்தலில் வெளியிலிருந்து கொண்டே போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர் மீது முன்னர் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

16 வருடங்களுக்கு முன் இவரது தந்தையும், முன்னாள் பிரதமருமான அலி பூட்டோவின் கொலையை அடுத்து நாட்டை விட்டு வெளியேறி அஞ்ஞாதவாசம் செய்து வந்தார்.

அஞ்ஞாதவாச காலத்தில் இவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் பல்லாயிரக்கணக்கான இவரது ஆதரவாளர்கள் கராச்சி விமான நிலையத்தில் இவரை வரவேற்க நின்றிருந்தபோது இவர் வந்திறங்கியதும் பொலிசார் கைது செய்து பலத்த பாதுகாப்புடன் காவலில் வைத்துள்ளனர். அப்போது பொலிஸ் - பொதுமக்கள் மோதலும் இடம்பெற்றது.

—கே-சி

## நமது நோக்கு

### கந்தரோடையிற் கல்விப் பணி

கந்தரோடை வரலாற்றுப் புகழ்மிக்க ஊர். தொல்பொருள் ஆய்வுகளால் அதன் தொன்மை வெளிப்பட்டது.

அந்த ஊரின் இரு கண்களாக விளங்கியவர்கள் வடக்கே கந்தையாவும் தெற்கே கந்தையாவும்!

தெற்குப் பகுதியில் வாழ்ந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியை நிறுவியவர் இ. கந்தையா உபாத்தியாயர். வடக்குப் பகுதியில் வாழ்ந்த அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர் நிறுவிய பாடசாலையே தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

இன்று தமிழ்க் கந்தையா வித்தியாசாலை நூற்றாண்டு கல்விப்பணி செய்து நிறுவனர் நினைவு விழாவை நடாத்துகின்றது.

சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் கல்வி கற்ற பெரியார், அவர் ஏற்றிவைத்த தமிழ்த் தீபத்தை அணையவிடாது காப்பாற்ற பாடசாலை நிறுவினார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பலர் வேற்றுமொழிக் கல்வியில் நாட்டங்கொண்ட வேளையில், தமிழையும் சைவத்தையும் வளர்த்துப் போற்றிய நாவலரின் பணியைப் பின்பற்ற மொழிப்பற்றும் சமயப்பற்றும் மிகுந்த பெரியார்கள் முன்வந்தனர்.

அந்த வகையில், கந்தையா உபாத்தியாயர் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!" என்ற குறிக்கோள் வாசகம் கொண்ட பாடசாலை மூலம் ஆற்றிய பணி காலத்தில் ஆற்றிய அரும்பணியாகும்!

புகழ்பெற்ற வள்ளல், டாக்டர் எஸ் சுப்பிரமணியம், எம். அப்புத்துரை போன்றோர் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை யார்தான் மறக்கமுடியும்?

நாற்பது ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்த கந்தையா உபாத்தியாயர், கற்றபடி நின்ற ஆசாரசீலர்.

அவர் இல்லம் பலரும் பின்பற்றவேண்டிய பல சிறப்புக்களைக் கொண்டதாக விளங்கியது. உணவு முறைகள், சுகாதாரப் பழக்கங்கள், விவசாய முறைகள், பசுக்காத்தல், விருந்தோம்பல், இசைப் பயிற்சி, வழிபாட்டு முறைகள் எல்லாம் பின்னிப் பிணைந்த வாழ்க்கைக் கல்வி அங்கு தழைத்தோங்கியது.

குற்றம் எங்கிருந்தாலும் கண்டிக்கத் தவறாதவர். கப்பலோட்டிய தமிழன் எனப் புகழ் பெற்ற வ. உ. சி. பதிப்பித்த நூலிற் காணப்பட்ட பிழைகளைத் துணிந்து சுட்டிக்காட்டியவர்.

வித்தியாலயம், புதிய சூழலுக்கேற்பத் தொடர்ந்து சிறப்போடு பணியாற்ற வாழ்த்துகிறோம்!

## இன்று

(சாவகச்சேரி)

இந்திய யாத்திரையை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியுள்ள நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளுக்கு தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியம் வரவேற்பு விழா ஒன்றையும் குருபாத பூஜையையும் இன்று 5ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நகர் வாரிவனேஸ்வரம் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் நடாத்தவுள்ளது. 155

★

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 5-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணியளவில் பண்ணிசைப் புகழ் சி. நடராசா 'திருப்புகழ்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். அறிமுக உரையை பண்டிதர் ஆ. வே. முருகேசு நிகழ்த்துவார். (ம)

★

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை தமிழ் மன்றம் நடாத்தும் முத்தமிழ் விழா இன்று 5-ம் திகதி காலை கலாசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ் மன்றத் தலைவர் சு. உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனின் வாழ்த்துரை இடம்பெறும். சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா கலந்துகொள்கிறார்.

நாளை இயல் - இசைஅரங்கின் முதன்மை விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதமும் கலந்துகொள்வார்கள். —158

## இராசிபலன்

5-11-1993
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 20)

ஷஷ்டி மு. இ. 9-55 வரை; புனர்பூசம் பி. இ. 1-35 வரை, கிரிநாள் இராகுகாலம் காலை 10-34 முதல் 12-04 வரை; சுபநேரம் காலை 6-04 முதல் 7-34 வரை.

மேடம்: திடீர் பயணம், நண்பர்களிடம் மனக்கசப்பு, வேதனை.

இடபம்: காரிய அனுகூலம், நியாய சிந்தை, கல்விஉயர்வு.

மிதுனம்: குழப்பமின்மை, உடல் உபாதை, அன்னியர் பகை.

கடகம்: பணி ஆதரவு, பிரச்சனைக்கு தீர்வு, பயண அனுகூலம்.

சிம்மம்: உளத் தாக்கம், அதிக யோசனை, வேலைப்பளு.

கன்னி: பிறர் உதவி, தொழில் மேன்மை, விருந்தினர் வரவு.

துலாம்: சகோதர பாசம், இல்லச் சிறப்பு, புதிய சிந்தனை.

விருச்சிகம்: கடும் சினம், மனைவி பிணக்கு, அமைதி குன்றல்.

தனுசு: மனக்குமுறல், பணியால் தொல்லை, வேலைக் கஷ்டம்.

மகரம்: இனசன மகிழ்ச்சி, வீட்டில் சுபகாரியம், பண வரவு.

கும்பம்: எதிர்பாராத சம்பவம், அறிஞர் ஆசி, மன மகிழ்ச்சி.

மீனம்: குடும்பப் பிணக்கு, அதிகாரிகள் துயர், புறம் கூறல்.

— ஜோஸ்யர்.

## நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிராமிய சுகாதார உதவியாளர்களை பதிலுக்கு ஒப்பு சுகாதார சேவையாளர்களாக தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19 ம் திகதி காலை 8-30 மணிக்கு சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் கீழ்காணும் ஆவணங்களுடன் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படுகிறார்கள். இந்த ஆவணங்களின் மூலப்பிரதி ஒவ்வொன்றினதும் ஒளிப்படப் பிரதி ஒன்றினையும் கொண்டு வருமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ், கிராமசேவையாளரின் சான்றிதழ், நிறுவனத் தலைவரின் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் போன்றவற்றை எடுத்து வரும்படி கேட்கப்படுகிறார்கள். —162

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை
திருநெல்வேலி.

முத்தமிழ் விழாவும்
பரிசளிப்பு விழாவும்
1993

இடம்: கலாசாலை அரங்கு

காலம்: 05-11-93 — 06-11-93
(இன்றும் நாளையும் காலை 8-30 மணி)

தலைவர்: ஆர். எஸ். நடராஜா (அதிபர்)

முதன்மை விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்
(வடமாநில கல்விப் பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. வெ. இளங்குமரன்
(பொறுப்பாளர் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம்)

திரு. சி. வேலாயுதம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

திரு. சி. சிவலிங்கராஜா
(முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)

பழைய மாணவர்களையும், ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி ஆசிரிய கலாசாலை
குடும்பம்.

(ஏ-3564)


## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தலைமை வழங்கப்போவதாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்ததாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. -இ

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மணி விழா நிகழ்ச்சி இரண்டாவது தொடர் கருத்தரங்கு நாளை 6ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு இராமநாதன் நுண்கலைபீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சன்மார்க்க சபை மணி விழாச் சபைத் தலைவர் லாகேசி ஆ. தம்பித்துரை தலைமையில் ஆரம்பமாகும் இவ் விழாவில் வரவேற்புரையை கலைப்பேராசு ஏ. ரி. பொன்னுத்துரையும் அறிமுகவுரையை தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவார்கள்.

இந்தக் கருத்தரங்கு சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்கள் நடைபெறும். [162]

## இராணுவநடவடிக்கையால் பாதிக்கப்பட்ட தமிழீழ பொதுக் கல்வி தேர்வு . 1993 சிறப்புத் தேர்வு நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

சென்ற மாதம் நடைபெற்ற தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கீழ் குறிப்பிட்ட நேர அட்டவணைப்படி தேர்வு நடைபெறவிருப்பதாக பளை, தென்மராட்சி, அச்சுவேலிப் பகுதியில் தேர்வில் தோற்ற முடியாத மாணவர்கள் அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் பாடசாலைக்கு அறிவிக்கப்படும் அறிவுறுத்தல்படி தேர்வில் தோற்றலாமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| நாள் | தினம்/திகதி | முற்பகல் வேளை | பிற்பகல் வேளை |
|---|---|---|---|
| 1 | 93 - 11 - 08 திங்கள் | 8. ஆங்கிலம் I 8-30—9-30 II 9-45—11-45 | 5—7 சமயம் I 1-00—2-00 II 2-15—4-15 |
| 2 | 93 - 11 - 09 செவ்வாய் | 2 கணிதம் II 8-30—11-30 | 2. கணிதம் — I 1-00—2-00<br>9-11 அழகியல்—I 2-15—3-15 |
| 3 | 93 - 11 - 10 புதன் | 3. விஞ்ஞானம் II 8-30—11-30 | 3. விஞ்ஞானம் I 1-00—2-00<br>9-11 அழகியல் II 2-15—4-15 |
| 4 | 93 - 11 - 11 வியாழன் | 4. வரலாறும் சமூகக்கல்வியும் II 8-30—11-30 | 4 வரலாறும் சமூகக்கல்வியும் I 1-00—2-00<br>9- அழகியல் (சித்திரம்) III 2-15—4-15 |
| 5 | 93 - 11 - 12 வெள்ளி | 12-20 தொழில் நுட்பப் பாடம் I 8-30—9-30 II 9-30— 1-30<br>21. வர்த்தகமும் கணக்கியலும் II 8-30—11-30 | 21. வர்த்தகமும் கணக்கியலும் I 1-00—2-00 |
| 6 | 93 - 11 - 14 ஞாயிறு | 1 தமிழ் மொழியும் இலக்கியமும் I 8-30—9-15 II 9-45—11-45 | 1 தமிழ் மொழியும் இலக்கியமும் III 1-00—3-00 |

